பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 06 வியாழக்கிழமை 22.08.2024 | அதிர்வு 020

## எந்த வேட்பாளருக்கும் நாங்கள் ஆதரவில்லை

### கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு



இலங்கையின் ஜனா திபதித் தேர்தலில் போட்டி யிடும் எந்த வேட்பாளருக் கும் தமது 05

### தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராகக் கஜேந்திரன் போர்க்கொடி

# அரியம் துரோகி




## அவருக்கு எவரும் வாக்களிக்கக் கூடாதாம் தேர்தலைப் புறக்கணிப்பதே ஒரே வழியாம்

(கனகராசா சரவணன்)

"இந்தியா, இலங்கை அரசுகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், தமிழர்களைத் தோற்கடிப்பதற்காகவுமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா.அரியேத்திரன் களமிறங்கியுள்ளார். இவரின் இந்த முடிவு தமிழீழத் தேசியத் தலைவருக்கும், 50 ஆயிரம் மாவீரர்களுக்கும், விடுதலைப்போராட்டத்தை ஆதரித்து இந்த மண்ணிலே வாழ்ந்து பேரினவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட 3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களுக்கும் செய்யும் துரோகமாகவே மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். 05

### வடக்கு, கிழக்கை மீளிணைத்து

## பொலிஸ், காணி அதிகாரங்களை ஒருபோதும் வழங்கவே மாட்டேன்!

### முதலாவது பிரசாரக் கூட்டத்தில் நாமல் திட்டவட்டம்



"தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை எனக்குக் கிடையாது. முடிந்ததை முடியும் என்பேன், முடியாததை முடியாது என்பேன். தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மொழி உரிமையையும் வழங்குவேன். 06



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2023 இல் நடத்தாமல் போனமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று உயர்நீதிமன்றத்திற்கு வருகின்றன.

இந்தத் தேர்தல் சமயம் உயர்நீதிமன்றத்திடம் இருந்து அதிரடியான உத்தரவுகள், கருத்துக்கள், தீர்ப்புகள் வந்தால் அவை இந்தத் தேர்தல் பிரச்சாரத்தை மேலும் அதிர வைக்கும் என்பது நிச்சயம்.

இந்த வழக்கு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னால் நடைபெற்றிருந்தது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலலகொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர, யஸந்த கோத்தாகொட ஆகியோரே ஐவருமாவர்.

நிதி அமைச்சர் என்ற 05



# புதையல் தோண்டுவதற்காகப் பலி கொடுக்கப்பட்ட இளம் யுவதியின் சடலம் 6 மாதங்களின் பின் மீட்பு!

## நுவரெலியா மாவட்டம் மந்தாரநுவர பொலிஸ் பிரிவில் சம்பவம்

(ஆ.ரமேஸ்)

புதையல் தோண்டுவதற்காகப் பலி கொடுக்கப்பட்ட இளம் யுவதியின் சடலம் ஆறு மாதங்களின் பின்னர் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டம் மந்தாரநுவர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கோனப்பிட்டிய தோட்டத்திற்குரிய சீனாபிட்டி தோட்ட அடர் வனப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் நேற்று மதியம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக தோண்டி எடுககப்பட்ட பெண் ஹேவாஹட்ட முள்ளோயா தோட்டத்தை சேர்ந்த சிவலிங்கம் தர்ஷினி (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

சம்பவத்தில் சடலமாக தோண்டி எடுக்கப்பட்ட பெண் அக்கரப்பத்தனை மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் தாதியாகப் பணியாற்றி வந்துள்ளார்.

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக அந்தப் பெண் தாதி காணாமற் போயுள்ளளார் என அக்கரப்பத்தனை மற்றும் மந்தாரநுவர பொலிஸ் நிலயங்களில் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் காணாமற் போன பெண் தொடர்பாக விசாரணைகளை நடத்திய பொலிஸார் தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில் சம்பவத்தில் காணாமற் போயிருந்த பெண் பாவித்து வந்த கை தொலைபேசி கடந்த இரண்டு தினங்களுக்கு முன் இயங்கியுள்ளது. இதை ஆதாரமாக கொண்டு தேடுதல் நடவடிக்கையை துரிதப்படுத்திய பொலிஸார் தொலைபேசியைப் பயன்படுத்திய நபரைத் தேடிக் கண்டு பிடித்தனர்.

அந்த நபர் காணாமற் போயிருந்த பெண்ணுடன் மன்றாசி பிரதேச வைததியசாலையில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரை விசாரித்ததில் உண்மை அம்பலமானது.

கைது செய்யப்பட்ட இந்நபர் கோனப்பிட்டிய சீனாபிட்டி கீனாகலை தோட்ட அடர் வனத்தில் புதையல் தோண்ட இப்பெண்ணைக் கடத்தி வந்து பலி கொடுக்கக் கொலை செய்து, புதைத்தார் என்ற தகவல் விசாரணையில் வெளியாகியது.

இந்த தகவலின் அடிப்படையில் மந்தாரநுவர பொலிஸார் வலப்பனை பிரதேச நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தமையைத் தொடந்து, புதைக்கப்பட்ட பெண்ணின் சடலத்தைத் தோண்டியெடுக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன் கிழமை காலை சம்பவ இடத்திற்கு வருகை தந்த நீதிவான் முன்லையில் புதை குழி தோண்டப்பட்டு பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் கண்டு மரண விசாரணை நடத்தப்பட்ட பின் சடலம் சட்ட வைத்தியரின் உடல் கூற்று பரிசோதணைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை பொலிஸ் பாதுகாப்பில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து, நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கையுடன் ஆஜர்படுத்தவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சடலமாக மீட்க்கப்பட்ட பெண்ணின் உடல் கூற்று பரிசோனை இன்று வியாழக்கிழமை நடத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







# கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் தேயிலை உரத்திற்கு மானியம் கிட்டும்



நாளை முதல் அமுலாகும் வகையில் கடற்றொழிலாளர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 25 ரூபா மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, தேயிலை துறையினருக்கு 4,000 ரூபா உர மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த சலுகைகள் இன்று முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# ஏறாவூரில் 5 ஆம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கு ஆபாசப் படம் காட்டி வந்த 57 வயது அதிபர் கைது

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5 ஆம் ஆண்டில் கல்விகற்றுவரும் சிறுவர்களுக்கு கையடக்க தொலைபேசியில் ஆபாச படம் காட்டி வந்த 57 வயதுடைய பாடசாலை அதிபர் ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பொலிஸ் பிரிவிலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் தரம் 5 ஆம் ஆண்டில் 3 சிறுமிகள், 3 சிறுவர்கள் என 6 பேர் கல்விகற்று வருகின்றனர். அந்த மாணவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில் அவர்களுக்கு பாடசாலை முடிவுற்ற பின்னர் மேலதிகமாக மாலையில் அதிபர் கற்பித்து வந்துள்ளார்.

இதன் போது அதிபர் அந்த மாணவர்களுக்கு தனது கையடக்கத் தொலைபேசியில் இருந்து ஆபாச படங்களை காட்டிவந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. ஒரு மாணவி மாலை நேர வகுப்பிற்கு போகமுடியாது எனப் பெற்றோரிடம் தெரிவித்த நிலையில், அதற்கான காரணத்தை கேட்டபோது சிறுமி அதிபரின் இந்த ஈனச் செயல் தொடர்பாக தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு பெற்றோர் பொலிஸ் அவசர இலக்கமான 119 இற்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் பாதிக்கப்பட்ட 3 மாணவிகளான சிறுமிகளிடம் இருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்தமையுடன் 57 வயதுடைய அதிபரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட அதிபரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெண்கள், சிறுவர்கள் பிரிவு பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர்.

# தமிழருக்கு தம்மை தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய உரிமை மிகவும் அவசியம்

## ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய இடித்துரைப்பு

"தேசிய இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் போதுமான தீர்வாக அமையாது. தமிழ் மக்களுக்குத் தம்மை தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு மிகவும் அவசியம்." – என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இலங்கையால் ஓர் அங்குலமேனும் முன்னோக்கிச் செல்ல முடியாது. பொருளாதாரப் பிரச்சினை மட்டும் அல்ல, இனப்பிரச்சினையும் பாரதூரமான பிரச்சினையாகும்.

தேர்தல் நெருங்கும் வேளையில்தான் 13 பற்றி பேசப்படுகின்றது. இது நகைச்சுவைத்தனமான செயற்பாடாகும். மாகாண சபை முறைமை அமுலில் உள்ளது. அதன்மூலம் பிரச்சினை தீர்ந்ததா? குறைந்தபட்சம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களாவது பகிரப்பட்டதா? இல்லை.

அவ்வாறு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கி இருந்தால்கூட ஓரளவு நம்பிக்கையை வென்றிருக்கலாம்.

ஜனாதிபதி வேட்பாளர்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. நாம் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றோம். 13 தீர்வாக அமையாது. 13 இற்கு அப்பால் சென்று தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு வழங்கப்படும். ஸ்கொட்லாந்தில் போன்று இங்கு தீர்வு வழங்கப்படும்." – என்றார்.

# 2 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்! காதலனும், காதலனின் நண்பனும் கைது!!

அநுராதபுரம், மிகிந்தலை பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த இரு சிறுமிகளை ஏமாற்றி வீடொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் எனக் கூறப்படும் காதலனும் காதலனின் நண்பனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் இரு சிறுமிகளே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். 27 மற்றும் 30 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இந்த இரு சிறுமிகளும் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் பாடசாலைக்குச் செல்லாமல் உடைகளை மாற்றி வேறு பிரதேசத்துக்குச் சென்று மீண்டும் வீடு திரும்புவதற்காக மிகிந்தலை பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது, இந்தச் சிறுமிகளில் ஒருவரது காதலனான சந்தேகநபர் வானொன்றில் பஸ் தரிப்பிடத்துக்குச் சென்று இரு சிறுமிகளையும் ஏமாற்றி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.


இதன்போது, அந்த வீட்டிலிருந்தவர்கள் சிறுமிகளை வீட்டில் தங்க வைக்க அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

பின்னர், சந்தேகநபரான காதலன் இந்தச் சிறுமிகளை ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று அவர்களுடன் இரண்டு நாட்கள் தங்கியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், அந்தக் ஹோட்டலுக்குச் சென்ற காதலனின் நண்பன் சந்தேகநபரான காதலனுடன் இணைந்து இந்த இரு சிறுமிகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


Vijaya Jewellery's
AUGUST
SAT SUN
24 25
12PM - 11PM 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
PRINT FAST
PROUDLY PRESENTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest


Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையில் தேர்தலுக்கான நிதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெட்டி நிறுத்தியமையாலேயே இந்தத் தேர்தல் நடக்க முடியாமல் போயிற்று என்பது தெரிந்ததே.

\+ + +

நேற்று தலதா அத்துக்கோறளை, தமது எதிரணி எம்.பி. பதவியைத் துறந்து விட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் சாய்ந்தார்.

தொடர்ந்து கயந்த கருணாதிலக, கபீர் ஹாசிம், அலவத்துவல, அங்கஜன் போன்றோரின் பெயர்களும் ரணில் பக்கம் சாய்வோரின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது என மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் தமது முகநூலில் நேற்றுத் தகவல் வெளியிட்டிருந்தார்.

அப்படி என்றால் இது குத்துக்கரணங்கள் - பல்டிகள் - நிறைந்த தேர்தல் என்ற சாதனையைப் படைக்கப் போகின்றது போலும்.

\+ + +

நமது டாக்டர் அர்ச்சுனா தான் இப்போது கொஞ்ச காலம் பேசுபொருள். இப்போது அவருக்குக் காலமும் கூடாது போலும்.

நேற்று மன்னார் நீதிமன்றத்தில் காலை முதல் பிற்பகல் தாண்டியும் தமது வழக்குக்காகத் தவமிருந்தார். பாவம்.

இனி அடிக்கடி அவர் மன்னார் நீதிமன்றுக்கு வர வேண்டி இருக்கும் போல.

மன்னாரில் பொது அமைப்புக்கள், வண. பிதாக்களுக்கு எதிராக முகப்புத்தகத்தில் மோசமான விமர்சனங்களை முன் வைத்தார் என்று இன்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளால் முறைப்பாடு செய்யப்பட இருப்பதாகத் தெரிகின்றது. அதற்குப் பின்னர் மான நஷ்ட வழக்கும் தொடர ஏற்பாடாகி இருப்பதாகக் கூறப்பட்டது. அவற்றுக்காக அடிக்கடி மன்னாருக்கு அவர் வந்து போக வேண்டி நேரலாம்.

அவரின் மன்னார் அல்லக்கைகள் அதற்காக அவருக்கு மன்னாரில் ஒரு ஜாகையை நிரந்தரமாக ஒழுங்குப்படுத்திக் கொடுத்து உதவுவது நல்லது.

\+ + +

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினர் நேற்று யாழ்ப்பாணம் ஜெட்விங் ஹோட்டலில் சுவிட்ஸர்லாந்துத் தூதுவரைச் சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பு ஏற்பாடு பற்றிய தகவல் ஏதும் பொதுக்கட்டமைப்பில் உள்ள தங்களுக்குத் தரப்படவில்லை என்ற ஆதங்கம் ரெலோவுக்கும் ஜனநாயகப் போராளிகளுக்கும் இருப்பதாகத் தெரிகின்றது.

எல்லோரையும் ஒன்றாக இழுத்துக் கொண்டு அரசியல் பயணம் என்பது கஷ்டமான விடயம்தான் பாருங்கோ...!

## அரியம் துரோகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நகரில் துண்டுப்பிரசுரம் வழங்கியது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதான பெரும்பான்மை வேட்பாளர்கள் மூவரும் தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து ஏமாற்று வார்த்தைகளைக் கூறி வருகின்றனர்.

இந்திய, மேற்கு நாடுகளுடைய பின்னணியுடன் கடந்த 15 வருடங்களாக ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு அதற்குள்ளான 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக வலியுறுத்தி வருகின்ற தரப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பேர்வையிலே தமிழர்களுடைய தேசிய அபிலாஷைகளைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தப் போகின்றோம் என்ற ஒரு பேர்வையைப் போத்திக் கொண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியேத்திரனைத் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தியுள்ளன. இதனூடாக எங்களுடைய மக்களை ஏமாற்றி வாக்களிக்கச் செய்கின்ற உபாயத்தை அவர்கள் கையாண்டு வருகின்றனர்.

இலங்கையின் ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்பட்டால்தான் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் உண்டு. எனவே, ஒரு பேரம் பேசுகின்ற வலிமைமிக்க சக்தியாக தமிழ் மக்களுடைய அரசியல் பலத்தை மாற்றுகின்ற முயற்சியிலே எமது கட்சித் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் எம்.பி. தலைமையிலான வழிநடத்தலிலே இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த பேரினவாத இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலம் பாதுகாப்பானதாக மாற்றியமைக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பு ஒழிக்கப்பட்டு சமஷ்டி கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதனூடாகத்தான் இந்தத் தீவிலே தமிழர்களும், முஸ்லிம்களும் பாதுகாப்பாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்க முடியும் என வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களிடம் வேண்டிக்கொள்கின்றோம்.

இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற மாயைக்குள் சிக்கிக் கொள்ள வேண்டாம். அரியநேத்திரன், இலங்கையை ஒரு பௌத்த நாடாக ஏற்றுக் கொண்டு ஒற்றையாட்சியை ஆதரித்தவர். அவர் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இலங்கையைச் சிங்கள பௌத்த நாடு என ஏற்றுக் கொண்டு 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக ஏற்றுக்கொள்ள அவரது மறைந்த தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளிலும் உடந்தையாகச் செயற்பட்டவர். அவருக்கு எவரும் வாக்களிக்கக்கூடாது. எனவே, ஒட்டுமொத்த தமிழ், முஸ்லிம்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்." - என்றார்.







## எந்த வேட்பாளருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கீகாரத்தை வழங்கப்போவதில்லை என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைச் சந்தித்துள்ள போதிலும் எந்த வேட்பாளருக்கும் ஆதரவை வெளியிடப்போவதில்லை என்றும் கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

நாங்கள் எவருக்கும் அங்கீகாரத்தை வழங்கமாட்டோம் என்று கொழும்பு பேராயரின் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மக்களே தங்களுக்கு யார் வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நாட்டில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பேச்சுகளில் மாத்திரம் ஈடுபடுகின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட பல ஜனாதிபதி வேட்பாளர்கள் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தைச் சந்தித்து பேச்சுகளை மேற்கொண்டுள்ளனர்.

எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்காத போதிலும் கத்தோலிக்க மக்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும், 2019 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதியை நிலைநாட்டுவது குறித்தும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுடன் பேச்சுகளை மேற்கொள்வோம்.

கல்வி போன்ற விடயங்கள் குறித்து ஆராயவே நாங்கள் அவர்களைச் சந்தித்தோம். இவை கத்தோலிக்கர்களுடன் தொடர்புபட்ட விடயங்கள் இல்லை.

மீனவர்கள் விவகாரம் குறித்தும் பேசினோம். கத்தோலிக்கர்களில் பெருமளவு மீனவர்கள் உள்ளனர்." - என்றார்.

# பொலிஸ், காணி அதிகாரங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளிணைத்துக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்க மாட்டேன்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது கன்னி தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார திட்டங்களை முன்னெடுத்து குறுகிய காலத்தில் நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றினார்.

2015ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாட்டை கையளித்தோம். 2019 ஆம் ஆண்டு பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த நாட்டையே கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்றார். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்துக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற தீர்மானமிக்க கேள்வி எழுந்த போது மக்களின் உயிரையே பாதுகாத்தோம்.

பொருளாதாரப் பாதிப்பை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் எமது அரசை வீழ்த்தினார்கள். அரசு வீழ்ச்சியடைந்தாலும் நாட்டை வீழ்ச்சியடைய செய்யவில்லை. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசைக் கையளித்து நிலைமைகளைச் சீர்செய்வதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கினோம்.

நாட்டின் தேசியத்துக்கும், இராணுவத்தினருக்கும் எதிரான தீர்மானங்களை ஒருபோதும் எடுக்க முடியாது. சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவும், குறுகிய நோக்கங்களுக்காக செயற்படவும் நாங்கள் தயாராகவில்லை என்பதால் தனித்துத் தீர்மானங்களை எடுத்துள்ளோம். சவால்களைக் கண்டு நாங்கள் அச்சமடையவில்லை. சவால்களை நான் விரும்புகின்றேன். எவர் மீதும் சேறு பூசவில்லை. கொள்கைகளை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றோம்.

தேசிய உற்பத்திகளை நிச்சயம் மேம்படுத்துவோம். விவசாயத்துறையில் இருந்து எமது தேசிய உற்பத்தி எழுச்சியை முன்னெடுப்போம். விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். கடன் பெற்று உணவு வழங்குவது சிறந்த பொருளாதார கொள்கையல்ல, விவசாயிகளின் பொருளாதாரத்தை பலப்படுத்துவோம்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே படை வீரர்கள் போரிட்டார்கள். நாங்கள் அரசியலில் இருக்கும் வரை இந்த நாட்டில் எல்லைக் கிராமங்கள் தோற்றம் பெறுவதற்கு இடமளிக்கப்போவதில்லை. இந்தப் பௌத்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் முன்னுரிமை மற்றும் கௌரவமளிக்கத் தயார். அதனைச் செய்வோம். அதேபோல் மாகாண சபைக்குள் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமாட்டோம்.

தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்பேன், முடியாததை முடியாது என்பேன்.

தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மொழி உரிமையையும் வழங்குவோம். ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளிணைத்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கமாட்டோம்.” – என்றார்.

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விதைத்த வினை...!

விதைத்த வினையை அறுத்தே ஆக வேண்டும். யாரும் தப்ப முடியாது. அது இயற்கை நியதியும் கூட.

இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் ஒரு கட்சியில் இருந்து நூறுக்குக் குறையாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகக் குத்துக்கரணம் அடித்து, தங்கள் கட்சியை விட்டு அணி தாவும் சம்பவம் முன்னெப்போதும் நடந்திராத ஒன்று என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டுகின்றனர்.

இந்தியாவில் - எமர்ஜென்சி காலத்தில் - சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் - அப்போதைய அடக்குமுறை ஆட்சியாளர்களைக் கண்டிப்பதற்காக 'முகமது பின் துக்ளக்' என்ற சினிமாப் படம் பிரபல நடிகர் சோவினால் தயாரித்து இயக்கி வெளியிடப்பட்டது. அந்தப் படத்தில்தான் துக்ளக் தனி ஒரு எம்.பியாக நாடாளுமன்றத்துக்குச் சென்று, மேலும் 350 எம்.பிக்களை குதிரைப் பேரம் பேசி, வாங்கி, எல்லோருக்கும் துணைப் பிரதமர் பதவி கொடுத்து, தமது அரசை அமைப்பார்.

நம்ப முடியாத அந்தக் கதையை இப்போது நிஜத்தில் நடத்திக் காட்டி இருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஒரே ஒரு எம்.பியாக - அதுவும் தேசியப் பட்டியல் தெரிவு மூலம் - பின் கதவால் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த - ரணில் விக்கிரமசிங்க, இப்போது ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவைப் பிளந்து, நூறுக்கும் அதிகமான எம்.பிக்களுடன் தமது அரசை முன்னெடுத்திருக்கிறார்.

மொத்தம் 145 எம்.பிக்களுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த மொட்டு கட்சியிடம் இப்போது எஞ்சி இருப்பது ஆக பதினைந்து எம்.பிக்கள்தான்.

இது ஒன்றும் புதிய நிலைமை அல்ல. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற மாதிரி இதற்கு முந்திய நாடாளுமன்றத்தில் மொட்டுக் கட்சியின் தலைவர்கள் என்ன செய்தார்களோ, அது இப்போது அவர்களுக்குத் திருப்பி நடக்கின்றது. அவ்வளவுதான்.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி 96 இடங்களை பெற்றது. மொட்டுக் கட்சியின் இன்றைய தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ போன்ற எல்லோரும் அப்போது அந்தக் கட்சியில் இருந்துதான் நாடாளுமன்றத்திற்கு வர முடிந்தது.

அந்த சுதந்திர கட்சியை உடைத்து, எண்பதுக்கும் அதிகமான எம்பிக்களை வளைத்துப் பிடித்துத்தான் தமது மொட்டுக் கட்சியை ராஜபக்ஷக்கள் உருவாக்கினார்கள்.

அப்போது ராஜபக்ஷக்கள் தனித்து நின்று, புதிய கட்சி அமைத்து, அப்போதைய ஜனாதிபதியின் கட்சியை உடைத்து, அதிலிருந்து ஆள்களை - எம்.பிக்களை - இழுத்தெடுத்து, தமது மொட்டுக் கட்சியை கட்டமைத்தார்கள்.

ஆனால் இன்று ஒரே ஓர் எம்.பி. பதவியுடன் நாடாளுமன்றத்திற்குத் தனித்து வந்த ரணில் விக்கிரமசிங்க, அதே ராஜபக்ஷக்களின் அருட்கடாட்சப் பார்வையினால் ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர், தனி ஆளாக இருந்து கொண்டு, அதே மொட்டு கட்சியை உடைத்து, நூறுக்கும் அதிகமான எம்.பிக்களின் ஆதரவுடன் அரசியல் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றார்.

சுதந்திரக் கட்சிக்கு ராஜபக்ஷக்கள் அன்று செய்த வினைக்குரிய பலனை இன்று ரணில் விக்கிரமசிங்க மூலம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது விதைத்த வினை. இதை அறுவடை செய்யும் காலம் இப்போது ராஜபக்ஷக்களுக்கு. அவ்வளவுதான்.



# 151 எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீது பெண்களுக்கு எதிரான வழக்குகள்

## 16 பேர் மீது பாலியல் புகார்

தற்போது பதவியில் இருக்கும் எம்.பி. மற்றும் எம். எல்.ஏ.க்களாக இருக்கும் 151 பேர் தங்கள் மீது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் இருக்கின்றன என தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் தெரிவித்திருப்பதாக ஏ.டி.ஆர். ரிப்போர்ட் தெரிவித்துள்ளது. இதில், மேற்கு வங்கம் முதலிடத்தில் உள்ளது.

இந்த அறிக்கைக்காக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான அமைப்பு (ஏ.டி.ஆர்), கடந்த 2019 முதல் 2024 வரையிலான தேர்தல்களின்போது, தற்போது எம்.பி., எம்.எல்.ஏக்களாக உள்ளவர்கள் தேர்தல் ஆணையத்தில் சமர்பித்த 4,809 பிரமாணப் பத்திரங்களில் 4,693 பிரமாணப் பத்திரங் களை ஆய்வு செய்தது. அதில், 16 எம்.பி.கள், 135 எம். எல்.ஏக்கள் ஆகியோர் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை சந்தித்து வருவது தெரியவந் தது.

இந்தப் பட்டியலில் மேற்கு வங்க மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. அம்மாநிலத்தின் தற்போது பதவியில் இருக்கும் 25 எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏக்கள் மீது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் உள்ளன. அத னைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசத்தில் 21 பேர், ஒடிசாவில் 17 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த அறிக்கையின்படி, தற்போது பதவியில் உள்ள எம். பி. மற்றும் எம்.எல்.ஏ.களில் 16 பேர், பாலியல் வன்கொடுமைத் தொடர்பான வழக்குகள் தங்கள் மீது இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றங்களுக்கு குறைந்தது 10 ஆண்டுகள் அல்லது ஆயுள் தண்டனை வரை வழங்கப் படலாம். இந்த 16 பேரில் இருவர் எம்.பி.கள், 14 பேர் எம். எல்.ஏ.க்கள்.

கட்சிகளைப் பொறுத்தவரை, பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ளும் எம்.பி., எம்எல்ஏக்களில் 54 உறுப்பினர்களைக் கொண்டு பாரதிய ஜனதா கட்சி முதலிடத்தில் உள்ளது. காங்கிரஸ் கட்சி 23 உறுப்பினர்களுடன் இரண்டாவது இடத்திலும், தெலுங்கு தேசம் கட்சி 17 உறுப்பினர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சிக ளில் தலா 5 உறுப்பினர்கள் மீது பாலியல் வன்கொடுமை வழக்குகள் உள்ளன.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான அமைப்பு அறிக்கை யின் மூலம் வெளிப்பட்டிருக்கும் இந்த விவகாரத்துக்கு சில வலுவான பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அரசியல் கட்சிகள் குற்றப் பின்னணி உள்ளவர்கள், குறிப்பாக பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டு உள்ளவர்களுக்கு தேர்தலில் போட் டியிட இடம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இதுபோன்ற குற்றப் பின்னணி கொண்ட வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதை தவிர்க்குமாறு தீவிரமாக வலியுறுத்தியுள்ளது.

# உத்தரபிரதேச மாநிலத்தில் மனைவியின் மூக்கை அறுத்த கணவனால் பரபரப்பு





தனது தாய் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று மனைவி கூறியதை அடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தால் கணவன், மனைவியின் மூக்கை அறுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசம் மாநிலத்தில் உள்ள ஹர்தோய், பனியானி பகுதியை சேர்ந்தவ ராகுல் என்பவரே இவரின் மனைவியான அனிதா (வயது 25) என்பவரின் மூக்கை அறுத்தவராவார்.

ரக்சா பந்தன் பண்டிகையை முன்னிட்டு தனது சகோ-தரனுக்கு ராக்கி கட்டிவிட பிறந்த வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று அனிதா கூறியதை அடுத்து கணவன்,மனைவிக்கு இடையே வாக்குவாதம் வெடித்துள்ளது.

இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றிய நிலையி-ல் கணவன் ராகுல் அனிதாவின் மூக்கை அறுத்துள்ளார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அனிதாவை ராகுலின் சகோ-காதரன் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளார்.

தீவிர சிகிச்சைக்குப் பின் ஆபத்தான கட்டத்தை கடந்த அனிதா, கணவன் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளதாக கூறப்படுகின்றது. தாய் வீட்டுக்கு செல்ல வேண்டுமென கூறியதால் மூக்கை அறுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி இன்று அறிமுகம்

## நடிகர் விஜய் அறிவிப்பு

“இந்தியா முழுவதும் இன்று முதல் நமது கொடி பறக்கும், தமிழகம் இனி சிறக்கும். வெற்றி நிச்சயம்.”

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கூறியுள்ளார்.

சென்னை பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் கட்சிக் கொடியை இன்று காலை 9.15 மணிக்கு நடிகர் விஜய் ஏற்றி வைக்கிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சரித்திரத்தின் புதிய திசையாகவும், புதிய விசையாகவும் ஒவ்வொரு நாளும் அமைந்தால் அது ஒரு பெரும் வரம். அப்படியான வரமாக இறைவனும் இயற்கையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கும் நாள்தான் 2024 ஒகஸ்ட் 22. நம் தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய அடையாளமான கொடி அறிமுகமாகும் நாள்.

தமிழகத்தின் நலனுக்காக உழைத்து, நம் மாநிலத்தின் அடையாளமாகவும் மாறப் போகும் நம் வீரக் கொடியை, வெற்றிக் கொடியை நாளை நம் தலைமை நிலையச் செயலகத்தில் அறிமுகப்படுத்தி, கழகக் கொடிப் பாடலை வெளியிட்டு, கழகக் கொடியை ஏற்றி வைக்கிறோம் என்பதை பெருமகிழ்வுடன் அறிவிக்கிறேன். இன்று முதல் நாடெங்கும் நமது கொடி பறக்கும், தமிழகம் இனி சிறக்கும். வெற்றி நிச்சயம்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, தமிழக அரசியலில் விஜய் எப்போது களம் இறங்குவார் என்ற எதிர்பார்ப்பு பெருமளவில் இருந்து வந்தது. இதற்கேற்ப விஜய் ரசிகர் சங்கமான தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு, பட்டினி தினத்தில் அன்னதானம், புயல் பேரிடர் பாதிப்பின்போது நிவாரணப் பொருட்கள் வழங்குதல், அம்பேத்கர் உள்ளிட்ட தலைவர்கள் பிறந்த நாளில் உருவச் சிலைக்கு மரியாதை செலுத்துதல் உள்ளிட்டவை தொடர்ச்சியாக நடந்தேறி வந்தன. இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளில் நடிகர் விஜய்யும் பங்கேற்று வந்தார்.

இந்தச் சூழலில் தான் நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கினார். இதற்காக டில்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்திலும் கட்சியின் பொதுச் செயலாளரான என்.ஆனந்த் கட்சியை பதிவு செய்தார். இதையடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் 2026 சட்டப்பேரவை தேர்தல்தான் இலக்கு என்றும் விஜய் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, கட்சியில் 2 கோடி உறுப்பினர் சேர்க்கைக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. அனைத்து நிலையிலான நிர்வாகிகளும் உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே அவர் நடித்த ‘தி கோட்’ என்ற திரைப்படத்தின் பணிகள் முடிந்த நிலையில், கட்சிப் பணிகளில் விஜய் தீவிரம் காட்டி வருகிறார்.

அதன்படி, தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு, கட்சி கொடி அறிமுகம் செய்வது ஆகியவை குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்துடன் விஜய் அவ்வப்போது ஆலோசனை நடத்தினார். இதில், மாநாட்டுக்கு முன்பாகவே கட்சியின் கொடியை அறிமுகம் செய்வது என முடிவு செய்யப்பட்டது. இதற்காக கடந்த 19 ஆம் திகதி பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் மஞ்சள் நிற பின்னணியில் நடுவில் விஜய் படம் இருப்பது போன்ற கட்சிக் கொடியை ஏற்றி விஜய் ஒத்திகை பார்த்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது.

இதைத் தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி பனையூரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இன்று காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்று கட்சியின் தலைவர் விஜய் கொடியை அறிமுகம் செய்து ஏற்றி வைப்பதோடு, கொடி பாடலையும் வெளியிடுகிறார்.

இந்த நிகழ்ச்சியில், பங்கேற்க 300 க்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் காலை 6 மணிக்கே தலைமையகத்துக்கு வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொடி அறிமுக நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி நீலங்கரை, கானாத்தூர் காவல் நிலையங்களில் நிர்வாகிகள் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

சொந்த இடத்தில் நிகழ்ச்சி நடைபெறுவதால், விஜய் செல்லும் வழித்தடத்தில் மட்டும் பாதுகாப்பு வழங்க பொலிஸார் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சூழலில் கட்சியின் கொடி எந்த நிறத்தில் இருக்கும் என்று தொண்டர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். சிவப்பு, மஞ்சள் ஆகிய இரு நிறங்களுடன் நடுவில் விஜய் முகம் இருக்கும் வகையிலான கொடி வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பின்னணியில்தான், தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை இன்று வியாழக்கிழமை அறிமுகப்படுத்தி, கொடி பாடலை வெளியிடுவதாக அக்கட்சித் தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதற்காக பனையூரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் விழாவில் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.




# ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ஆளில்லா விமானத் தாக்குதல்

ரஷ்ய தலைகர் மீது முன்னெப்போதும் இல்லாத வகையில் உக்ரைன் ஆளில்லா விமானங்களை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மொஸ்கோ மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியின் மீது நேற்று தாக்குதல் நடத்த வந்த 11 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம், வான் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

சில கிரெம்ளினுக்கு தெற்கே 38 கிமீ (24 மைல்) தொலைவில் உள்ள பொடோல்ஸ்க் நகரத்தின் மீது விழுந்ததாகக் கூறப்படுகிறது.

"ஆளில்லா விமானங்கள்ள் மூலம் மொஸ்கோவைத் தாக்கும் மிகப்பெரிய முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த தாக்குதல்களில் சேதமோ, உயிர்சேதமோ ஏற்படவில்லை" என்று டெலிகிராம் செய்தியிடல் செயலியில், மொஸ்கோ மேயர் செர்ஜி சோபியானின் தெரிவித்தார்.

மொஸ்கோ மீது ஆளில்லா விமான தாக்குதல்கள் அரிதானவை. கடந்த மே 2023 இல் குறைந்தது எட்டு ஆளில்லா விமானங்கள் தாக்கியதை விடவும் இந்த தாக்குதல் முந்தைய தாக்குதலை விட மிகப் பெரிதாகும்.

புதனன்று நடந்த சரமாரி தாக்குதல் ரஷ்யா மீதான பரந்த தாக்குதலின் ஒரு பகுதியாகும், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அதன் வான் பாதுகாப்பு பிரிவுகள் 45 உக்ரைனிய ஆளில்லா விமானங்களை ஒரே இரவில் அழித்ததாகக் கூறியது.

இதேவேளை உக்ரைன் முற்றிலுமாக தோற்கடிக்கப்படும் வரை இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படாது என ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவரும், முன்னாள் ரஷ்ய அதிபருமான டிமிட்ரி மெத்வதேவ் நேற்று தெரிவித்தார்.









# ஜேர்மனின் வரவு செலவு திட்டத்தில் உக்ரைனுக்கான நிதி ஒதுக்கப்படாது

ஜேர்மனின் வரவு செலவு திட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கு பின்னர் உக்ரைனுக்கான நிதி எதுவும் ஒதுக்கப்படாது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன் படி, இனிவரும் காலங்களில் முடக்கப்பட்டுள்ள ரஷ்ய சொத்துக்களில் இருந்து கிடைக்கும் லாபம் மற்றும் வேறு வகையிலான வருவாயிலிருந்தே உக்ரைனுக்கு உதவுவதற்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜேர்மன் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வரும் இரண்டாவது நாடாக ஜேர்மன் இருந்து வருகிறது.

இதேவேளை, ஜேர்மனியின் 2024ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உக்ரைனுக்கு 7.5 பில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எனினும், அது 2025 வரவுசெலவு திட்டத்தில் 7.5 பில்லியன் யூரோக்களிலிருந்து 4 பில்லியன் யூரோக்களாக குறைக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகின.

இவ்வாறானதொரு பின்னணியில், மீண்டும் 2025 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஜேர்மன் வரவுசெலவு திட்டத்தில் இருந்து உக்ரைனுக்கு நிதி ஏதும் ஒதுக்கப்படமாட்டாது என செய்திகள் வெளியாகியுள்ளன.



# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## மக்கள் வீதியில் தஞ்சம்

இந்திய மற்றும் பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள பல கட்டிடங்கள் குலுங்கியதால் அதிர்வினை உணர்ந்த பொதுமக்கள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறி வீதியில் தஞ்சம் புகுந்தனர்.

அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்கள் மக்களை பீதியடையச் செய்துள்ளன.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் வெளியாகவில்லை.





# மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும்

## அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் ஊழல், மோசடி நிறுத்தப்பட வேண்டும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பண்டுவஸ்நுவர பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மோசடியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டில் நீண்ட காலமாக நிலவும் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காகவே நாங்கள் ஆட்சியைக் கோருகிறோம்.

அதன் முதற் கட்டமாக ஊழல் மோசடியைத் தடுப்பதுடன் மோசடியில் ஈடுபட்டோரை கைது செய்ய வேண்டும்.

பால்மா உள்ளிட்ட பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க உணவுப் பொருள்களுக்கும் வற்வரியை விதித்தமையே இதற்கான காரணமாகும்.”– என்றார்.











# மொட்டு அதிருப்தியாளர்களின் புதிய அணிக்கு ஜனஜய முன்னணி எனப் பெயரிடத் திட்டமாம்!

## தலைமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து அமைக்க உத்தேசித்துள்ள புதிய கூட்டணியின் தலைமை பொறுப்பை பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணிக்கு ஜனஜய முன்னணி என பெயர் சூட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அந்த முன்னணியின் பொதுச் செயலாளர் பதவிக்காக அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கூட்டணியை ஸ்தாபிப்பதற்கான முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுங்கட்சியின் அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# காத்தான்குடி - நாவற்குடாவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



காத்தான்குடி – நாவற்குடா புதிய கல்முனை வீதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நாவற்குடாவை சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் தொடர்பில் 717 முறைப்பாடுகள்




ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 51 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 717 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 365 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 328 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# வெளிநாட்டு மலைப்பாம்புகள் நான்கை மறைத்து வைத்திருந்த கும்பல் கைது!







சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வந்து விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 வெளிநாட்டு மலைப்பாம்புகளை வத்தளை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

செல்லப்பிராணிகளை விற்பனை செய்யும் மேற்படி விற்பனை நிலையத்தின் உரிமையாளர் மற்றும் 2 ஊழியர்களும் இதன்போது கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது இலங்கையின் அரிய வகை முதலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மலைப்பாம்புகள் பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டு விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விலங்குகளை தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு அனுப்பி அவை பற்றிய அறிக்கையைப் பெறுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கார் விபத்தில் மூவருக்குப் படுகாயம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம இடமாற்றத்திற்கு அருகில் கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு கார் ஒன்று, வீதியின் இடதுபுறக் காற்பரப்பில் மோதி, வளைந்து, வலதுபுறக் கம்பியில் மோதி கவிழ்ந்தது.

நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் சொகுசு பஸ் ஒன்றுடனும் கார் மோதியதில் பஸ்ஸூம் சேதமானது.

காரின் சாரதி தூக்கக் கலக்கத்தால் வீதியின் அருகிலிருந்த பாதுகாப்பு வேலியில் மோதி நின்ற நிலையில், பின்னால் வந்த பஸ் அந்த காருடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

காரில் இருந்த மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.









# பிறந்த சிசுவினுடைய மரணத்திற்கு நீதி கோரி வவுனியா வைத்தியசாலை முன் ஆர்ப்பாட்டம்!





(கே.வசந்தன்)

வவுனியா வைத்தியசாலையில் பிறந்த சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த சிசுவின் உறவினர்கள் மற்றும் பொது மக்களால் நேற்று மாலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலையின் முன்பாக வீதியில் அமர்ந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களின் அசமந்தத்தால் மரணித்த சிசுவிற்கு நீதி வேண்டும் எனவும், வைத்தியசாலையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை எனவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண இது தொடர்பில் கவனம் செலுத்தி ஒரு விசாரணை குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் எனவும், தொடரும் மருத்துவ மாபியங்களின் அசமந்த போக்கிற்கு தீர்வு காண அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சட்டவைத்திய அதிகாரியின் விசாரணையில் நம்பிக்கை இல்லை எனவும், சிசுவின் சடலத்தை பார்வையிட்ட வவுனியா நீதிபதி விசாரணைகளை முன்னெடுத்திருந்தார், அவரை நாம் நம்புகின்றோம் எனவும், நீதிபதி தங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் இதன்போது மரணித்த சிசுவின் உறவினர்கள் கோரினர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக வைத்தியசாலை பிரதான வாயில் அருகில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது.

# வவுனியா வைத்தியசாலையில் மரணித்த சிசுவின் உடலை நீதிபதி பார்வையிட்டார்

(கே.வசந்தன்)

வவுனியா வைத்தியாசலையில் பிறந்து மரணித்த சிசுவின் உடலை மாவட்ட நீதிபதி பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

சிசுவின் மரணம் வைத்தியர்களின் அசமந்தத்தால் ஏற்பட்டதாக சிசுவின் தந்தை வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து மாலை வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த நீதிபதி சிசுவின் சடலத்தை பார்வையிட்டமையுடன், தந்தையிடம் இது தொடர்பான வாக்குமூலங்களை பெற்றார். விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தார்.





# சஜித்தின் சமரச அழைப்பின் பேரில் ஹக்கீம் - ஹரீஸ் நேற்றுச் சந்திப்பு!

(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோருக்கு எதிர்க்கட்சித்தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ விடுத்திருந்த அழைப்பின் பேரில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று இருவரும் சஜித் பிரேமதாஸவை சந்தித்து சமகால அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினர்.

எச்.எம்.எம். ஹரீஸை அவரது கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இடைநிறுத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ள பின்னணியில் இந்த சமரச சந்திப்புத் திட்டம் சஜித் பிரேமதாஸவினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

நேற்றைய சந்திப்பின. போது கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள், சமகாலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் எச்.எம்.எம். ஹரீஸ் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்திருந்தார்.

# தேர்தல் ஆணைக்குழு நியாயமான முறையில் செயற்படவில்லை என்கிறார் ரொஷான் எம்.பி.

"தேர்தல்கள் ஆணைக்குழு நியாயமான முறையில் செயற்படவில்லை. 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற நிலையில் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்படுகிறது."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

"ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானது என்றாலும் நீதியானதாக இடம்பெறுகிறதா என்ற கேள்விகள் எழுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவே முதலில் அநீதியை இழைக்கின்றது. சில வேட்பாளர்களுக்காக அவர்களின் உதவியாளர்களை அழைத்துவர தனியான இடம் ஒதுக்கியுள்ளது. 39 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்கையில் 4 வேட்பாளர்களுக்காக மட்டும் தனி இடம் ஒதுக்குவது அவர்களுக்கான ஊக்குவிப்பாகவே அமைகின்றது. இது தேர்தல்கள் சட்டத்துக்கு சாதகமானதா?

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக 20 ரூபாவே செலவிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரால் 109 ரூபா செலவிட முடியுமென அறிவித்துள்ளது. அப்படியென்றால் ஒரு வேட்பாளர் 180 கோடி வரை செலவழிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிறிய தொகையல்ல. தேர்தல்கள் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகிறது.



அதேபோன்று, சில ஊடகங்களும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்காகவும் செயற்படுகின்றது. 39 பேருக்கும் சம உரிமையை வழங்க வேண்டும். ஆனால் தற்போது ஒருசில ஊடகங்கள் மிகவும் கீழ்த்தரமான முறையில் தங்களுக்கு இணக்கமான வேட்பாளரை மாத்திரம் ஊக்குவிக்கின்றன.

நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கும் பவ்ரல் நிறுவனமும் தற்போது அநீதியான முறையில் நடந்து கொள்கிறது. பொருளாதார கொள்கைகள் தொடர்பான விவாதத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 6 வேட்பாளர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பவ்ரல் அமைப்பு ஒரு தரப்பிடமிருந்து கப்பம் பெற்று விட்டதா என்று எண்ண தோன்றுகிறது.

இது நீதியான தேர்தலா? செலவு கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தின் எதிர்பார்ப்பு என்ன? கறுப்புப் பணம், போதைப்பொருள் பணம், பாதாளக் குழுக்களின் பணம், சூதாட்டப் பணம் என்பன இந்தத் தேர்தலில் புழக்கத்தில் உள்ளன. இப்படி போனால் எதிர்காலத்தில் நாடு அழிவையே எதிர்நோக்கும்.

நாட்டின் கடன் தொகை அதிகரித்துள்ளதுடன் டொலர் விலையும் அதிகரித்துள்ளது. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் விசேட அவதானம் செலுத்த வேண்டும். நாட்டை சௌபாக்கியமான யுகத்தை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். எமக்கென பொறுப்புகள் உள்ளன. நீதியான தேர்தலை நடத்தி, ஊழல் அற்ற நாட்டை உருவாக்க வேண்டும்."– என்றார்.

# 6 மாத காலத்தில் ரூ. 7.9 பில்லியன் வரி நிலுவையை அறவிடுவதற்கு மதுவரித் திணைக்களம் தவறியுள்ளது

## சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்



"உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 1680 பில்லியன் ரூபாவை திரட்டிக் கொண்டுள்ளன. மதுவரி திணைக்களம் பிரதான மதுபான நிறுவனங்களிடமிருந்து 7.9 பில்லியன் ரூபா வரியை இதுவரை அறவிடவில்லை."

– இவ்வாறு நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது வழிவகைகள் பற்றிய நாடாளுமன்ற குழுவின் அறிக்கையை சபைக்கு முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரச வருவாயை ஈட்டிக் கொள்வதற்கு பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகிய மூன்று அரச நிறுவனங்கள் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 1680.4 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரி விலக்களித்ததால் 978 பில்லியன் ரூபா இழக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது. வரி செலுத்தாதவர்களின் 900 வங்கி கணக்குகளை முடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்ட 17 மில்லியன் பேருக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் (டின் இலக்கம்) வழங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க பரிந்துரைத்தோம். இதற்கமைய 5 மில்லியன் பேருக்கு டின் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கம் இறக்குமதியாளர்களிடமிருந்து வரி அறவிடல் குறித்து சிக்கல் காணப்படுகிறது. இதற்கான ஆலோசனைகளை குழுவின் ஊடாக வழங்கியிருந்தோம். இதற்கமைய பிரதான தங்க இறக்குமதியாளர்களில் 17 பேரில் 6 பேர் வரி செலுத்தியுள்ளனர். அத்துடன் தண்டப்பணம் அறவிடல் கூடாக மாத்திரம் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு மாத்திரம் 10 பில்லியன் ரூபாவை மேலதிகமாக திரட்டியுள்ளது.

மதுவரி திணைக்களம் அறவிட வேண்டிய 7.9 பில்லியன் ரூபா வரி இன்றும் நிலுவையில் உள்ளது. வரி செலுத்தாத பிரதான மதுபான உற்பத்தி நிறுவனங்களின் அனுமதி பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மதுவரி திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினோம்.

அனுமதி பத்திரத்தை இடை நிறுத்துவது குறித்து நிதியமைச்சு உரிய ஆலோசனைகளை வழங்காத காரணத்தால் உரிய தீர்மானத்தை எடுக்க முடியவில்லை என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே வரி செலுத்த வேண்டிய தரப்பினரிடமிருந்து முறையாக வரிகளை அறவிட்டால் மக்கள் மீது வரி சுமைகளை திணிக்க வேண்டியதில்லை."– என்றார்.

# சஜித்துக்கு ஆதரவு வழங்குவதற்குக் காரணம் என்ன? சபையில் விளக்கினார் கருணாதாஸ கொடித்துவக்கு



"நாட்டை இல்லாதொழிக்கும் வகையில் செயற்படும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை நிபந்தனையற்ற வகையில் எதிர்க்கிறேன். ஆகவே தற்போதைய தீர்மானமிக்க நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்து எதிரணி பக்கம் செல்ல தீர்மானித்துள்ளேன்."

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

"2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு 1 லட்சத்து 15 ஆயிரம் வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்கு தெரிவானேன். நாட்டு மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பை எமது தலைவர்கள் நிறைவேற்றவில்லை.

அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் நாடு தீர்க்கமான தருணத்தை தற்போது எதிர்கொண்டுள்ளது. நாட்டுக்கு எதிராக இந்த அரசாங்கம் செயற்படுவதை நிபந்தனையற்ற வகையில் எதிர்க்க வேண்டும். ஆகவே இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளேன். நான் எதிரணி பக்கம் செல்வேன்.

இதுவரை காலமும் எனது அரசியல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரதமர் தினேஷ் குணவர்தன உட்பட அரசியல் தரப்பினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுக்காகவே நான் இந்த தீர்மானத்தை எடுத்தேன். என்னைத் தெரிவு செய்த மக்களின் அபிலாசைகளை நான் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்"– என்றார்.

# ரிஷாத்தின் நிதியை ரத்துச்செய்து முஷாரப்புக்கு புதிதாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது நியாயமா?

## சஜித் சபையில் கேள்வி



"பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ரிஷாத் பதியுதீனுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இரத்துச்செய்துள்ள நிலையில் ஆளும் தரப்பு உறுப்பினர் முஷாரப் எம்.பிக்கு புதிதாக 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பது தவறான நடவடிக்கையாகும். தேர்தல் காலத்தில் இவ்வாறு செயற்படுவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"தேர்தல் ஒன்று இடம்பெற இருக்கும் சமயத்தில் அரச நிதி பயன்படுத்திக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டவிரோதமான குற்றச் செயலாகும். நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதி, அவர் எதிர்க் கட்சியில் எங்களுடன் இணைந்து செயற்பட தீர்மானம் எடுத்த காரணத்தினால் அந்தப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை இல்லாமல் செய்திருக்கிறது.

அதேநேரம் அரச தரப்புக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கு முஷாரப்புக்கு புதிதாக 300 மில்லியன் ரூபா அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பணத்தை இவர்கள் தேர்தலுக்காகவே பயன்படுத்த இருக்கின்றனர். அரச அதிகாரிகள் இந்தத் தவறை செய்ய வேண்டாம்.

இந்த நடவடிக்கை முற்றாக சட்டவிரோதமாகும். அதனால் இந்த சட்டவிரோத நடவடிக்கையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கிறோம்."– என்றார்.

# மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜயந்த டி சில்வா மறைவு

மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜயந்த டி சில்வா (வயது 78) நேற்றுக் காலை காலமானார்.

ஜயந்த டி சில்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட உதவித்தொகை வேலைத் திட்டத்தின் ஊடாக வறுமையில் வாழும் பல்வேறு மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக அரசியலில் பிரவேசித்த இவர் சுமார் 3 தசாப்தங்களுக்கு மேலாக மேல் மாகாண சபையின் உறுப்பினராக கடமையாற்றியுள்ளார்.

இவர் சுகயீனமுற்று நீண்ட காலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அர்ச்சுனாவின் மன்னார் வழக்கு 25ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு




( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் பொது வைத்தியசாலையில் இளம் தாய் மரணித்த சம்பவம் தொடர்பாக நீதி கோரும் முகமாக அத்துமீறி வைத்தியசாலைக்குள் உட்புகுந்தார் எனக் கூறப்பட்ட வைத்தியர் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

28.07.2024 அன்று மன்னார் பொது வைத்தியசாலையில் இளம் தாய் ஒருவருக்கு உரிய சிகிச்சை அளிக்காத காரணத்தினால் அவர் மரணத்தை தழுவினார் எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பாக கடந்த 02 ஆம் திகதி இரவு வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா மன்னார் பொது வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார்.

அங்கு இவர் நடந்து கொண்ட விதத்தால் கடமையில் இருந்தவர்களுக்கு அசௌரியங்கள் எற்பட்டிருந்ததாக மன்னார் வைத்தியசாலை நிர்வாகத்தால் மன்னார் பொலிஸிக் முறைபாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால் இவர் கடந்த 03 ந் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 07 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இதன் வழக்கு நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

வைத்தியசாலைக்குள் வைத்தியர் அர்ச்சுனா மற்றும் யுரியூப் நபர்களால் கைதொலைபேசி மூலம் எடுக்கப்பட்ட வீடியோக்களின் பதிவுகளை பொலிஸாரிடம் ஒப்படைக்க முடியுமான என அப்பொழுது நீதிவான் வினவினார். தாங்கள் ஒப்படைக்கின்றோம் என இவ்வழக்கில் எதிர்த் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் அதற்கு ஒத்துக்கொண்டனர்.

இவ்வழக்கில் எதிர்த் தரப்பான வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்காக சட்டத்தரணிகள் அந்தனி மடுத்தீன், கமல்ராஜ், செ.டினேஸ், சுதர்சனா, கௌசல்யா ஆகியோருடன் இன்னும் ஓரிருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இவ்வழக்கு மீண்டும் எதிர்வரும் 25 ஆம் திகதியன்று அழைக்கப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.08.2024




நீங்கள் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். வீடு கட்டுதல், புனரமைத்தல் போன்ற பொறுப்புகள் காரணமாக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.

சகபணியாளர்களுடன் விருப்பங்களில் வேறுபாடு காணப்படும். நீங்கள் அதிகப்படியான பணிகள் இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வது நல்லது. இது உறவை பலப்படுத்தும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். இன்று எடுக்கும் பயனுள்ள முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை பெற்றுத் தரும்.

பணியில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் உங்கள் பணிகளை உற்சாகமாகவும் எளிதாகவும் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று இனிமையாக நேரம் கழிப்பீர்கள். உங்கள் துணையுடன் நல்ல உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் கடின உழைபிற்காக ஊக்கத் தொகை பெறுவீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். புத்திசாலித்தனமான போக்கு உங்கள் செயல்களில் வெற்றியை பெற்றுத் தரும். சுதந்திரமான கண்ணோட்டத்தை பராமரிப்பதன் காரணமாக நீங்கள் உகந்த முடிவை எடுப்பீர்கள்.

உங்களுக்கு கூடுதல் பணிகள் வழங்கப்படும். அதில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வீர்கள்.

இன்று காதல் விவகாரங்கள் சிறப்பாக இருக்காது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இதனை தவிர்க்க இருவரும் கலந்து பேசிக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வதந்திகளை தவிர்க்கவும். இன்று யதார்த்த அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் காண நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். அதிர்ஷ்டத்தை நம்பியிராமல் உங்கள் முயரசிகளில் நம்பிக்கை வையுங்கள். இதன் மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

தேவையற்ற வாக்குவாதம் காரணமாக இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

சம்பாதித்த பணத்தில் பெரும்பான்மையை உங்கள் குடும்பத்துக்காகச் செலவு செய்வீர்கள். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருப்பதால் சேமிக்கும் வாய்ப்பு குறைவு.




இன்று உங்களின் தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சற்று மந்தமான நாளாக இருக்கும். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணியில் சீரான பண்கள் காண நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். தவறான புரிந்துணர்வை தவிர்க்கவும்.

நீங்கள் பணத்தை சரியாக கையாள வில்லையெனில் பணம் இழக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையை சமாளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றுஅதிக பணிகள் காரணமாக பதற்றமும் அதன் காரணமாக கால் வலியும் காணப்படும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி அதில் வெற்றியடைவீர்கள் . நீங்கள் சாதிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அதற்காக உங்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி காண்பீர்கள். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். உங்கள் தகவல் தொடர்பு திறமை மூலம் நீங்கள் பணியில் சாதிப்பீர்கள்.

நீங்கள் இன்று காதலின் இனிமையை உணர்வீர்கள். இன்று உங்கள் காதலை வெளிபடுத்த உகந்த நாள்.

இன்று நிதிநிலையில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் பணத்தை சிறப்பாக திறமையுடன் கையாள்வீர்கள்.

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்பட நேரலாம். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும் நாள். ஆரம்பத்தில் சில தடைகள் இருந்தாலும் முடிவில் சாதகமான பலனைப் பெறுவீர்கள்.

இன்று பணியிடத்தில் நீங்கள் சில மாற்றங்களை சந்திக்க நேரலாம். மாறுபடும் சூழ்நிலைகளுக்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

காதலைப் பொறுத்தவரையில் இன்று முக்கிய முடிவுகள் கண்டிப்பாக எடுக்க வேண்டாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். வரவு செலவு என்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் பொதுவான இலக்குகள் நோக்கி செயல்படுவீர்கள். இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் அறிவார்ந்த முறையில் பணி செய்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இதனால் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் சம்பந்தமான முக்கிய முடிவுகளை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இன்று கூடுதல் சுமைகள் காணப்படும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற்பயிற்சி மூலம் நீங்கள் இதனை தவிர்க்கலாம். இன்று இது மிகவும் தேவை,

# இன்றைய ராசி பலன்கள் - 22.08.2024




சில ஆரம்ப கால தடைகளுக்குப் பின் உங்கள் இலக்குகளை பூர்த்தி செய்வீர்கள். இதற்கு சில கூடுதல் முயற்சி தேவைப்படும். இன்றைய நாளின் முடிவில் வெற்றி காண்பீர்கள்.

இடைவிடாத தொடர் முயற்சி மூலம் நீங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் காதலை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். காதல் சம்பந்தமான சுப நிகழ்சிகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

உங்கள் வீட்டை புனரமைக்க இன்று நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் அனுகூலமான முடிவுகள் எடுக்க மனதில் தெளிவுடன் இருக்க வேண்டும். இன்று நெருங் கியவர்களுடன் உரையாடுவதில் கூட உங்களிடம் தயக்கம் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படாது. பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்கு வாதங்கள் ஏற்படும். உங்கள் காதலை உங்கள் தந்தை எற்றுக் கொள்ள மாட்டார்.

நிதி நிலையைப் பொறுத்தவரை இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




இன்று நீங்கள் வளர்ச்சி காண்பீர் கள். உங்கள் ஆற்றலை நன்கு உணர்ந்து செயல்படுவீர்கள். உங்கள் தகவல் தொடர்பு திறமையால் நீங்கள் புகழடைவீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி இன்று உங்களிடம் காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் செயல் களின் மூலம் உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று போதிய அளவு பணம் காணப்படும்.

உங்களின் அனுசரணையான மன நிலை காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




நீங்கள் செய்யும் செயல்களில் திருப்தி கிடைக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இதன் மூலம் பாதுகாப் பின்மை உணர்வை நீங்கள் சமாளிக்க லாம்.

பணியிடத்தில் உங்கள் மேலதி காரிகளால் சில பிரச்சினைகளை எதிர் கொள்வீர்கள். இதனால் சிறிது வருத்தம் காணப்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

மனக் குழப்பம் காரணமாக காதல் விஷயத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். சூடான வாக்கு வாதங்களில் ஈடுபடுவீர்கள். இது உறவின் இனிமையை கெடுக்கும்.

இன்று இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

ஆரோக்கியமான உணவை சரியான நேரத்தில் உண்ணவும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park